OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
S. M. FERNANDO
580, HOSPITAL ROAD,
(Near Bank of Ceylon)
JAFFNA.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை 4.00 5.00

கண் வைத்திய நிபுணர்கள் சிபார்சு செய்யும் கண்ணாடிகளை சரியாக வழங்குவோர்கள்
எஸ். எம். பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கிக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2024 மார்கழி 04 ஞாயிற்றுக்கிழமை (19 - 12 - 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 23

## ஓயாது பொழிந்த கடும் மழையால்

# குடாநாட்டில் பெரும் வெள்ளப் பெருக்கு

# மக்கள் ஆயிரக்கணக்கில் வீடிழந்து தவிப்பு

### பாடசாலைகளிலும் ஆலயங்களிலும் தஞ்சம்
### குளங்கள் வழிகின்றன; வயல்கள் நாசம்

யாழ்ப்பாணம், டிசம்பர் 19

நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) நள்ளிரவுக்குச் சற்றுப் பின்னர் தொடங்கிய கடும்மழை நேற்று நண்பகலுக்குப் பின்னரும் ஓயாது பொழிந்ததால், குடாநாட்டின் பல பகுதிகளிலும் பெரும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே பெய்த மழையினால் வெள்ளம் தேங்கி நின்ற பகுதிகள், நேற்றைய கடும் மழையினால் மேலும் பாதிக்கப்பட்டன. அதனால் ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை இழந்து பாடசாலைகள், ஆலயங்கள் மற்றும் பொது மண்டபங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர். மேலும் ஆயிரக்கணக்கானோரின் வீடுகளை வெள்ளம் சூழ்ந்துள்ளதால் அவர்களும் இடம்பெயர்ந்துள்ளனர்.

கடும்மழை காரணமாக பல குளங்கள் நிரம்பி வழிந்து நீர் தேங்கிப் பாய்கின்றது. தாழ்ந்த பிரதேசங்களிலும், வீதிகளிலும் அடிக் கணக்கில் வெள்ளம் பாய்கிறது. நெல் வயல்கள் நீரில் மூழ்கியதால் பெரும் பயிர் நாசம் ஏற்பட்டுள்ளது.

கடு மழை, வெள்ளப் பெருக்குக் காரணமாக நேற்றுக் குடாநாட்டில் பொதுவான இயல்புநிலை பாதிக்கப்பட்டிருந்தது. போக்குவரத்தும் மிக மந்தமாகக் காணப்பட்டது.

வலிகாமம், தென்மராட்சிப் பகுதிகளில் கடும் மழை காரணமாக வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. வடமராட்சிப் பகுதியில் மழை பெரிதாகப் பெய்யவில்லை.

யாழ். நகரம், நல்லூர், சண்டிலிப்பாய், சங்கானை, தெல்லிப்பளை, உடுவில் பிரதேச செயலகப் பிரிவுகள் வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர்கள் அறிவித்தனர்.

**நகரில்**

யாழ் நகரின் கரையோரப் பகுதிகள் உட்பட தாழ்ந்த பகுதிகளில் வெள்ளப் பெருக்குக் காரணமாக பல இடங்களில் வீடுகளுக்குள் நீர் புகுந்தது. இதனால் கல் வீடுகள் உட்பட குடிசை வீடுகளில் வாழ்ந்தவர்களும் வீடுகளை விட்டு வெளியேறி ஆலயங்கள், பாடசாலைகள், மற்றும் பொது மண்டபங்களில் தஞ்சம் புகுந்தனர். குளங்கள் பலவும் நிரம்பி வழிகின்றன. அதனால் அவற்றுக்கு அருகில் உள்ள வீடுகளில் வாழ்ந்தோரும் இடம்பெயர்ந்துள்ளனர்.

ஆரியகுளம், தேவரீக்குளம், தாராக்குளம், புல்லுக்குளம், பண்டாரக்குளம், பாணன் குளம், பிராமணன் கட்டுக்குளம், அம்மைச்சிக்குளம், வண்ணான்குளம், கற்குளம், இலந்தைக்குளம், பிரப்பங்குளம் பூதவராயர்குளம், திருநெல்வேலி மறவன்குளம் என்பன உட்பட அனேகமாக சகல குளங்களும் நிரம்பி வழிகின்றன.

நல்லூர் அரசடி வீதி, ஜெயச்சந்திரன் வீதி ஆகியவற்றைச் சேர்ந்த சுமார் 350 குடும்பங்களும், ஆரியகுளம் பகுதியில் சுமார் 180 குடும்பங்களும், தேவரீக்குளம் பகுதியில் சுமார் 120 குடும்பங்களும், சங்கிலியன் தோப்புப் பகுதியில் 150 குடும்பங்களும் வீடுகளை இழந்ததாக அறியவந்தது.

கொழும்புத்துறை, அரி

(4 ஆம் பக்கம் பார்க்க)

### மழையிலும் படையினர் ஷெல் வீச்சு

யாழ்ப்பாணம், டிச 19

நேற்றுக் காலை மழை பெய்து கொண்டிருந்த சமயம் பலாலி முகாமில் இருந்து படையினர் விட்டுவிட்டு ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் பலாலியில் இருந்து ஏவப்பட்ட ஷெல்கள் அளவெட்டி, சுழிபுரம் பகுதிகளில் விழுந்தன. (இ-5)

### அன்னை திரேசாவுக்கு விருது

கல்கத்தா, டிச 19

ஐ.நா சபையின் அங்கமான யுனெஸ்கோவின் சமாதான அறக்கட்டளை விருது அன்னை திரேசாவுக்கு நேற்று வழங்கப்பட்டது.

15 லட்சம் ரூபா பெறுமதியான இந்த விருதின் நிதியைக் கொண்டு கல்கத்தாவில் உடல் ஊனமுற்றவர்களுக்கான கருணை இல்லம் ஒன்றை உருவாக்கப் போவதாக அன்னை திரேசா தெரிவித்தனர். (இ-5)

### மத்திய கிழக்கு பேச்சு மீண்டும் நோர்வேயில்

ஜெருசலம், டிச. 19

மத்திய கிழக்குப் பிரச்சினை தொடர்பான இஸ்ரேல் — பலஸ்தீன விடுதலை இயக்கப் பிரதிநிதிகளுக்கிடையிலான பேச்சுக்கள் நாளை திங்கட்கிழமை மீண்டும் நோர்வேயில் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

படை விலகல் தொடர்பாக இரு தரப்பினருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது. (இ)

## இழக்குக் கரையில் புயல் அபாயம்!

கொழும்பு, டிச 19

இன்று கிழக்குக் கரையோரப் பகுதியில் சில சமயம் புயல் ஏற்படலாம்.

இவ்வாறு கொழும்பு வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று அறிவித்தது.

வங்காளவிரிகுடாவுக்கு தெற்கே ஏற்பட்ட பலமான தாழ்வு அமுக்கம் நேற்று பிற்பகல் 3 மணியளவில் இலங்கையின் தென்கிழக்கு கரையோரத்துக்கு கிழக்கே 400 கிலோ மீற்றர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### மழை – காற்றினால் படகுகள் மோதின
#### சிலாலியில் வெள்ளி இரவு சம்பவம்

யாழ்ப்பாணம், டிச. 19

சிலாலிப் படகுச் சேவை இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளை திடீரென பெய்த கடும் மழையினாலும் காற்றினாலும் எதிரெதிராக வந்த இரு படகுகள் மோதுண்டதில் சிலர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 11.30 மணி அளவில் இடம்பெற்றது.

சம்பவத்தில் காயமடைந்தவர்களில் ஆனைக்கோட்டை உயரப்புலத்தைச் சேர்ந்த நடராசா சந்திரபாலன் (வயது 45) என்பவர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

### வெள்ளப் பாதிப்பு விவரம் சேகரிப்பு
#### நிவாரணம் வழங்க நடவடிக்கை

யாழ் மாவட்டத்தில் வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருவதாக யாழ். அரச அதிபர் நேற்று மாலை தெரிவித்தார்.

உதவி அரச அதிபர்கள் தமது பிரிவில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் பற்றிய விவரங்களை தமக்குச் சமர்ப்பித்த பின் நிவாரண நடவடிக்கைகள் பற்றி கொழும்பில் உள்ள சமூக சேவைப் பகுதியுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் சொன்னார். (இ-5)

## மட்டக்களப்பு, வன்னியிலும் நேற்று பலத்த மழை
### இரணைமடுவில் நீர் மட்டம் உயர்வு

யாழ்ப்பாணம் டிச 19

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றுப் பெய்த கடும் மழையினால் 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 3 ஆயிரத்துக்கும் அதிக வீடுகள் சேதமடைந்துள்ளன.

வெல்லாவெளி, வாழைச்சேனை, ஏறாவூர், செங்கலடி ஆகிய பகுதிகளே மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அங்குள்ள ஆறுகள் பலவும் பெருக்கெடுத்துள்ளன.

அதேசமயம் வன்னிப் பெருநிலப்பரப்பில் மன்னார், முல்லை, வன்னி மாவட்டங்களிலும் மழை காரணமாக குளங்கள் பல உடைப்பெடுக்கும் நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. கால்வாய்கள் நீரினால் நிரம்பியுள்ளன. வீதிகளுக்கு மேலாக வெள்ளம் பெருகிப்பாய்கிறது.

இரணைமடுக் குளத்தின் நீர் மட்டம் அதிகரித்துவருவதை அடுத்து நீரை வெளியேற்றும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இரணைமடுக் குளத்தின் நீர் மட்டம் வேகமாக அதிக

(4 ஆம் பக்கம் பார்க்க)

### டிசம்பரில் ஒரே நாளில் பெய்த கூடுதல் மழை

யாழ்ப்பாணம், டிச. 19

வெள்ளி பகலும் வெள்ளி நள்ளிரவு முதல் நேற்றுப் பிற்பகல் வரையும் பெய்த கடும் மழையின் அளவு 236 மில்லி மீற்றர் எனப் பதிவு செய்யப்பட்டிருப்பதாக யாழ். பல்கலைக்கழக புவியியல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த பல ஆண்டுகளில் டிசம்பர் மாதத்தில் ஒரே நாளில் பெய்த மிகக்கூடிய மழை வீழ்ச்சி இது என்றும்—

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழ்வு அமுக்கத்தினால் பெறப்படும் இந்த மழை சூறாவளியாக மாறினால் பெரும் நாசங்கள் ஏற்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-5)

#### தளபதிகள் நால்வரும் கிறிஸ்தவர்கள்

## பௌத்த நாடான இலங்கை ஓர் இக்கட்டான நிலைக்குள்
### ஜெரி டி சில்வா நியமனம் குறித்து பி. பி. ஸி.

லண்டன், டிச. 19

புதிய இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா ஒரு கிறிஸ்தவர். இவரது நியமனத்துடன் விமானப்படை, கடற்படை, தரைப்படை, பொலிஸ் ஆகிய அனைத்தினதும் தலைவர்கள் கிறிஸ்தவர்கள் ஆகியுள்ளனர். பெரும்பான்மை பௌத்த நாடான இலங்கையில் இது ஒரு இக்கட்டான நிலையை உருவாக்கியுள்ளது.

பி. பி. ஸியின் கொழும்புச் செய்தியாளர் கிறிஸ்தா நாஸ் தனது செய்திக் கண்ணோட்டம் ஒன்றில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சரிந்து கொண்டிருக்கும் இராணுவம் மற்றும் அரச படையினரின் நிலையை ஜெரி டி சில்வா சரிக்கட்டா விடில் அவரது மதமே அவருக்கும், அரசுக்கும் எதிராகக் கடும் பௌத்த தேசியவாத குழுக்களால் சுட்டிக் காட்டப்படும் நிலை ஏற்படும்.

சுமார் 10 ஆயிரம் பேர் அளவில் இருக்கும் எனக் கணிக்கப்படும் விடுதலைப் புலிகளுடன், கடந்த 10 ஆண்டு காலமாகப் போராடி வரும் 70 ஆயிரத்துக்கு மேற்பட்ட இராணுவத்தினர் 50 வயதான ஜெரி டி சில்வாவின் வழிநடத்தலில் சிறு வரவுள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### பூநகரியில் மோதல் 4 சிப்பாய்கள் காயம்

பூநகரி பகுதியில் கூமார் துறைக்கு சற்று வடக்கே ஏற்பட்ட மோதல் ஒன்றில் 4 படையினர் காயமடைந்தனர் என்று இலங்கை வானொலி தனது செய்தி அறிக்கையில் நேற்று தெரிவித்தது.

நேற்று இராணுவ கமாண்டோக்கள் மறைந்திருந்து விடுதலைப்புலிகள் மீது தாக்குதல் மேற்கொண்டதாகவும் அப்போது விடுதலைப் புலிப் போராளி ஒருவர் வீசிய எறிகுண்டாலேயே சிப்பாய்கள் காயமுற்றனர் என்றும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (இ-9)

### வயல் நிலங்கள் நாசம் குடிசைகளுக்கு தீ!
#### படையினர் அட்டகாசம்

யாழ்ப்பாணம், டிச. 19

கடந்த புதனன்று காலை திருமலையில் உள்ள கிரவெளி முகாமில் இருந்து வெளியேறிய இராணுவத்தினர் பெரியசோலை காட்டுப் பகுதியில் தேடுதல் நடத்தினர்.

அதேசமயம் — வெருகல் முகாமில் இருந்து கல்வெட்டுவான், கல்தீவு பகுதிகளுக்கு விசைப்படகுகளில் சென்ற படையினர் அங்கு பயிரிடப்பட்டிருந்த சோளம், இறுங்கு போன்றவற்றை வெட்டி நாசம் செய்துள்ளனர். அங்கிருந்த விவசாயிகளின் குடிசைகளையும் படையினர் தீயிட்டு கொளுத்தினர். அங்குள்ள தமிழர்கள் சிலர் இராணுவத்தினரால் தாக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-5)

### பயணிகளுடன் வாதுவ இன்று புறப்படுகிறது

யாழ்ப்பாணம், டிச. 19

காங்கேசன்துறையில் தரித்துள்ள 'வாதுவ' கப்பல் இன்று பிற்பகல் பருத்தித்துறைக்கு வந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு கொழும்பு திரும்ப உள்ளது.

இந்தக் கப்பலில் பயணம் செய்ய யாழ். செயலகத்தில் பதிவு செய்துள்ள பயணிகள் அனைவரும் இன்று பிற்பகல் 3 மணிக்கு பருத்தித்துறைத் துறைமுகத்தில் சமுகமளிக்குமாறு யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் அறிவித்துள்ளார்.

### கப்பல்களிலிருந்து நேற்று பொருள் இறக்கப்படவில்லை

யாழ்ப்பாணம், டிச. 19

கடல் கொந்தளிப்பு மற்றும் மோசமான காலநிலை காரணமாக பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பல்களில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் நேற்று நடைபெறவில்லை.

மார்கோ கப்பலில் இருந்து மண்ணெண்ணெய் பரல்களும் துருனு கப்பலில் இருந்து உரவகைகளும் இறக்கப்படஉள்ளன. (இ-109-5)

#### முச்சந்தி முரளி



வடக்கு - இழக்கை இவர் பிரிக்கிறதுக்கிடையில் ... பிரிந்து போயிடும் ...

## வடக்கையும் இழக்கையும் பிரிக்காது
## பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது
### ஜனாதிபதி கூறுகிறார்

தற்போது தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ள வடக்கையும் - கிழக்கையும் பிரிக்காமல் இன்றைய பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது. கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி தேர்தல்களை நடத்த அரசு முடிவுசெய்துள்ளது. தற்போதைய பிரச்சினையை வடக்குக்கு மட்டும் உரியதாக்கி அதனை தீர்த்துவைப்பேன் என உறுதி அளிக்கிறேன்.

இவ்வாறு ஸ்ரீலங்கா ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கியதேசியக் கட்சியின் 39ஆவது வருடாந்த மாநாட்டில் ஜனாதிபதி உரையாற்றினார்.

கொழும்பு ... உள் ... ஜனாதிபதி தொடர்ந்து பேசுகையில்:-

நாட்டிலிருந்து பயங்கரவாதத்தை பூண்டோடு ஒழித்துக்கட்ட வேண்டும். இந்த குறிக்கோளை அடைய அரசாங்கம் முழு உறுதி பூண்டுள்ளது.

வடக்கு - கிழக்கு பிரச்சினை இனப்பிரச்சினை அல்ல அது ஒரு பயங்கரவாதப் பிரச்சினையே. இனப் பாரபட்சம் என்ற போர்வையில் பயங்கரவாதிகள் தமது நோக்கத்தை அடைவதற்கு முயற்சி செய்கிறார்கள்.

தமிழர்கள் சிங்கள மக்களின் நண்பர்கள். வடக்கிலும் - கிழக்கிலும் உள்ளவர்களுக்கு சம்பளம், ஓய்வூதியம் என்பவற்றை வழங்க அரசாங்கம் பெருந்தொகைப் பணத்தைச் செலவிட்டு வருகின்றது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள மக்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் வடக்கு-கிழக்கு மாகாண மக்களுக்கும் வழங்கப்படும் — என்றார்.

## விஜேதுங்காவே ஐ.தே.க. வேட்பாளர்
### பொதுக் குழு நேற்று முடிவு

மணிலா, டிச. 19

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமது கட்சியின் வேட்பாளராக ஜனாதிபதி விஜேதுங்காவை நிறுத்த ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுக்குழு தீர்மானித்துள்ளது.

கொழும்பில் கூட்டப்பட்ட கட்சியின் பொதுக் குழு மாநாட்டில் விஜேதுங்காவை தமது வேட்பாளராக நிறுத்துவது என்ற முடிவு ஏற்றுக் கொள்ளப்பட்டது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

45 நாட்கள் நிரம்பிய பூச்சி நீக்கப்பட்ட அல்சேஷன் நாய் ஆண், பெண் குட்டிகள் விற்பனைக்குண்டு. க. நடராசா, பலாலி றோட், புலேந்திரன் வீதி, (ஆசைப்பிள்ளை மில் ஒழுங்கை). கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (28481)

### வீடு விற்பனைக்கு

நீர்வேலி, பருத்தித்துறை பிரதான வீதியில் 4 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: திருமதி வ. கார்த்திகேசபிள்ளை, 6ஆவது மைல் கல், நீர்வேலி தெற்கு, நீர்வேலி. (28446)

### விற்பனையாகிறது

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களும், பயிற்சி பெறக்கூடிய விதத்திலும் கணிதம்-6க்குரிய புத்தகம் யாழ். நகரில் எல்லாப் புத்தகசாலையிலும் விற்பனையாகிறது. உதயன் வெளியீடு. (28345)

### கோழிக்குஞ்சு விற்பனை

பிறிமா - லோமன் ஐந்து நாட்கள் பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு மற்றும் ஓடர்களுக்கு புறொயிலர், வெள்ளை பேட்டுக்குஞ்சு, சேவல் கோல்டன் கொமட் பேட்டுக்குஞ்சுகள் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: ''மல்லிகாபதி'', சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (28165)

### மலிவு விற்பனை

மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகள் மலிவு விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. இலவசமாக நேர அட்டவணை வழங்கப்படுகிறது. அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி (வெலிங்டன் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். (சி-6810)

### திருவெம்பாவை நூல்

மிகவும் விறுவிறுப்பாக விற்பனையாகின்றது. கோல்ட்ஸ் அச்சகத்தாரின் திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி கைக்கடக்கமான சைஸ். விலை 5/- மட்டுமே நிம்மதி கடை, உரும்பராய். வெளியீட்டாளர் சந்திரன் - பிரபு. (6861)

### பத்திரம்

ஆசிரியர்களுக்கான வருடாந்த சம்பள ஏற்றப் பத்திரத்தை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள நாடுங்கள் சோதி புத்தகசாலை, கச்சாய் வீதி, (மக்கள் கடை அருகில்) சாவகச்சேரி. (சி 6718)

### தேவை

சகல விதமான மணிக்கூடுகள் திருத்துநர்கள் உடன் தேவை. நல்ல சம்பளம் தரப்படும். தொடர்பு: ரதி வாச் வேக்ஸ் அன்ட் ஸ்ரோர்ஸ், இல. 62, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (6856)

### பசன் பழம் தேவை

உங்கள் வீட்டுத் தோட்டங்களில் உள்ள பசன் பழங்களை (Passion Fruit) நாம் கொள்வனவு செய்கின்றோம் Taste Line Industries (PVT) Ltd. 14, Seenier Lane, Jaffna. (28373)

### ஆண்டு 5 அனுமதி

1994 ஆம் ஆண்டிற்கான ஆண்டு 5க்குரிய அனுமதிப் பரீட்சையுடன் புதிய பிரிவு ஆரம்பம் 19 12-93 விபரங்களுக்கு; உதயன் அக்கடமி, பருத்தித்துறை வீதி, (யாழ். மாநகரசபை முன்பாக) நல்லூர். (28474)

### MAKE UP CLASSES

Basic Make up and Modern Hair Dressing புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகி உள்ளன. சேரவிரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும். Yogi Home Science Academy 71, Nayanmar Veethy Kachcheri Nallur Road, Nallur, Jaffna. (28187)

### கல்வி - 94

கணிதம் ஆங்கிலத்தில் ஆண்டு 6 இலிருந்து O/L வரை 94 முதலாம் தவணைப் பரீட்சையில் உயர்ந்த பெறுபேறடைய B.Sc. (Cey) ஆசிரியரால் கற்பிக்கப்படும் 85, சிவன் கோவிலடி, திரு நெல்வேலி (281?6)

### ICING CLASSES

Wilton Sugar Flowers, Fondant Icing Structures வகுப்புக்கள் விரைவில் ஆரம்பமாக உள்ளன. சேர விரும்புவோர் 24-12-93க்கு முதல் தொடர்பு கொள்ளவும்: Yogi Home Science Academy, 71, Nayanmar Veethy, Kachcheri Nallur Road, Nallur, Jaffna. (28486)

### PERSONAL CLASSES

English Years Seven and Eight Home visited within Municipality. Group of two to four Preferred. Apply before 5th January, 1994 Advt. No. C/o 579, Uthayan Jaffna. (28438)

### 'மார்க்கோசின்"

மார்க்கோசின் செய்திறன் கொண்ட சிறந்த பூச்சிக் கொல்லி. பயிரில் துரிதமாகப் பரவும் தன்மை நிறைந்தது பூச்சி புழுக்களின் விருத்தியைத் தடுக்கிறது பூச்சிகள் எதிர்ப்புச் சக்தி - விருத்தி செய்வதைக் கட்டுப்படுத்துகிறது. யாழ் மின்சார நிலைய வீதியில் விவசாய இரசாயன விற்பனையாளர்கள், லங்கெம் லிமிட்டெட்டிலும் விற்பனையாகிறது ''மில்க்வைற்'' (சி-6728)

### வாழ்த்து மடல்கள்

அழகிய புதிய டிசைன்களில் நத்தார், புதுவருட வாழ்த்து மடல்கள் விற்பனையாகின்றன. வியாபாரிகளுக்கு விசேட கழிவில். ஆனந்தாஸ் புத்தக நிலையம், 21/B, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (6862)

## 1993இல் ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சை சித்தியடைந்தோருக்கான
## பாராட்டுக்களும், நன்றியும்

செல்வன் சி. மதிதரன், செல்விகள் ஹ சுவர்ணா, மு. ஜெயக்குமாரி, சி. ஜீத், இ. ஜனனி, வி. ஆரணி ஆகியோர் சித்தியடைந்து ஏழாலைக் கொத்தணியில் இப்பாடசாலைக்கு முதன்மையிடம் பெற உதவிய மாணவர்களை வாழ்த்தியும், அவர்களை ஊக்குவித்த ஆசிரியர்கள், அதிபர், பெற்றோரையும் நன்றியுடன் பாராட்டுகிறோம்.

தலைவர், செயலாளர்.
யா/ஏழாலை தெற்கு அமெரிக்கன் மிஷன்
தமிழ்க்கலவன் பாடசாலை, சுன்னாகம்.
(6751)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் ந. ரஞ்சித் கணேஸ்குமார்

அன்னை மடியில் 21 — 10 — 1960
ஆண்டவன் அடியில்: 21 — 01 — 1991

காலமெல்லாம் காத்திடுவேன்
என்றுரைத்த வார்த்தை தனை
காலமெல்லாம் நினைத்தே
வாழ்வேன் - என் கணவனே!
ஆண்டுகள் பல கடந்தாலும்
உங்கள் திருமுகம் என்னை விட்டகலாது.

உங்கள் இழப்பால் துயருறும்:
தாய் தந்தை
மனைவி, மைத்துனிகள்.

'தங்கஸ் தான்'
இருபாலை.
(28448)

## 55 ஆம் நாள் நினைவுகள்



### திருமதி காசிநாதர் இராசம்மா

(சத்திரந்தை, களபூமி, காரைநகர்.)

அகிலம்: 08 - 03 - 1917
இறைதம்: 26 - 10 - 1993

மாம்பழத்தினுள் வண்டு - உள்ளே
சென்றதை யார் சொல்வார் - கண்டு
தாயே உன் நினைவுகளில் - நாங்கள்
தாயகத்தில் எம் புகழ் பார்த்திருந்தாய்
காலங்கள் உருண்டோடினும் - தாயே
உன் நினைவுகளில் என்றும் நாம்.

தங்கள் ஆத்மா சாந்தியடைய கருணைக் கடலாம் இறைவனை இறைஞ்சுகிறோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

23, ஐயனார் கோவில் வீதி,
[illegible]
[illegible]
(28488)

## விற்பனையாகின்றன

மக்கள் வங்கி
எழுதுவினைஞர் / சுருக்கெழுத்தாளர்
போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டி

### ✲ பொதுவிவேகம், மொழித்திறன் ✲

ஆக்கம்:— T. லோகநாதன் B. A
அஸ்ரன் பதிப்பக வெளியீடு
விலை:- 115/-
(எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்)
(சி-6808)

## மகேஸ்வர இல்லம்

நவாலி, மானிப்பாய்

இவ் இல்லத்திற்கு பெற்றோரை இழந்து அல்லது வசதி குறைந்த 6 வயதுக்கும் 12 வயதுக்கும் இடைப்பட்ட ஆண்பிள்ளைகள் சேர்க்கப்பட உள்ளனர். இல்லத்தில் பெற்ற படிவத்தில் 25 — 12 — 1993க்கு முன் விண்ணப்பிக்கவும்.

தலைவர்,
தர்மகர்த்த சபை.
(6864)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண்ணுலகு: 31 — 05 — 1927
விண்ணுலகு: 19 — 11 — 1993

வட்டுக்கோட்டை

### திருமதி இராசபிள்ளை அன்னலட்சுமி

B. A. Hons. (London) Dip-in-English (Peradeniya.)
இளைப்பாறிய ஆசிரியை

திதி: 19 — 12 — 1993

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காகவும், எமது உயர் வாழ்விற்கு வழிகாட்டியாகவும் விளங்கிய எங்கள் குல தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்து, அஞ்சலி செலுத்திய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் மற்றும் இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய வைபவத்தில் கலந்து கொண்டு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் அனைவருக்கும் எங்கள் இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சகோதரர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ஆலோலை ஒழுங்கை,
வட்டுக்கோட்டை.
(28494)

## ஓராண்டு நினைவஞ்சலி



அல்லையில் மடியில்: 26 — 06 — 1973
ஆண்டவன் அடியில்: 29 — 12 — 1992

### செல்வி விஜிதா இராசரத்தினம்

திதி: 19 — 12 — 1993

அன்பு மகளே!
அருமைத் தங்கையே!
நீண்டதோர் வாழ்வில்
நீ இருப்பாய் என்றிருந்தோம்
ஆண்டதோர் பத்தொன்பதில்
அகன்றேனோ சென்றாய்
ஆண்டு பல ஆனாலும்
மாறாதம்மா எம் மனக்கவலை
ஆண்டவனடியில் உன் ஆன்மா அமரட்டும்.

உன் ஆத்மா சாந்தி அடைய கதிரமலை சிவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உன் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, அண்ணா.

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.
(6747)

## G. A. Q. - 95

### பேராதனை

★ கலை, விஞ்ஞானம், வர்த்தகம் எத்துறையிலாயினும் A/L இல் மூன்று பாடங்கள் சித்தியடைந்தவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

★ இதற்கான பல்கலைக்கழகப் பதிவுகள் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.

இதற்கான விரிவுரைகள்
11 - 12 - 93 இல்
ஆரம்பமாகிவிட்டன.

★ விவரங்களையும், விண்ணப்பப் படிவங்களையும், நேர அட்டவணையையும் நேரில் பெற்றுக் கொள்ளவும்.

விவரங்களுக்கு:

ரீ. அருள்நங்கை.

### புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(சி-6600)

அனைத்துலகப் பெண்கள் நாளை முன்னிட்டு
விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பினால் நடத்தப்படும்

## இலக்கிய, ஓவியப் போட்டிகள்

1994-03-08இல் நிகழவிருக்கும் அனைத்துலகப் பெண்கள் நாளை முன்னிட்டு, தமிழீழப் பெண்களுக்கான இலக்கிய, ஓவியப் போட்டிகளை நடத்த விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு முடிவு செய்துள்ளது.

இலக்கியப் போட்டிகள் சிறுகதை, கவிதை என்ற இரண்டு விடயத்தின் கீழ் நடைபெறும்.

ஓவியங்களை எந்த வகை ஓவியங்களாகவும் போட்டியாளர்கள் விருப்பியபடி வரையலாம்.

போட்டிக்கான விதிமுறைகள்:

★ படைப்புக்கள் தமிழீழப் பெண்களின் பிரச்சினைகளுக்கான தீர்வை முன்னெடுப்பதாகவும், அவர்களின் முன்னேற்றத்தைச் சுட்டுவதாகவும் அமைய வேண்டும்.

★ கவிதைகள் முப்பத்தைந்து வரிக்கு மேற்படாதனவாகவும், சிறுகதைகள் நான்கு பக்கங்களுக்கு மேற்படாதனவாகவும் இருக்கவேண்டும். ஓவியங்கள், போட்டியாளர்கள் விரும்பும் அளவில் வரையப்படலாம்.

★ போட்டியாளரின் சொந்தப் பெயர், முகவரி, வயது என்பன தனியாக ஒரு தாளில் எழுதப்பட்டு, படைப்புக்களுடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

★ கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், ''அனைத்துலகப் பெண்கள் நாள் இலக்கிய, ஓவியப் போட்டிக்கான படைப்புக்கள்'' என்று குறிப்பிடப்பட வேண்டும்.

★ நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

★ போட்டி முடிவு திகதி: 1994 - 01 - 20

★ படைப்புக்களை அனுப்ப வேண்டிய முகவரி:

சுதந்திரப் பறவைகள்
வெளியீட்டுப் பிரிவு,
விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு.
கோண்டாவில்.

தமிழீழப் பெண்களின் படைப்பாற்றலை ஊக்குவிக்கும்முகமாக நடத்தப்படும் இவ் இலக்கிய ஓவியப் போட்டிகளில் கலந்து கொள்ளுமாறு அனைத்துப் பெண்களையும் விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்புக் கேட்டுக்கொள்கின்றது.

— விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு.
(சி-6686)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 11 — 05 — 1912
உதிர்வு: 29 — 11 — 1992

### அமரர் குமார் ஆறுமுகம்

(நயினை நாகபூஷணி அம்பாள், முதலாம் திருவிழா உபயகாரர்)

திதி: 19 — 12 — 1993

அன்பின் உறைவிடமாய், பாசத்தின் பிறப்பிடமாய் எல்லோரினதும் நெஞ்சத்தில் வாழ்ந்த நீங்கள் எம்மை விட்டு பிரிந்து ஓர் ஆண்டு சென்றாலும், உங்கள் நினைவு எம் நெஞ்சை விட்டு நீங்காது. உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

36/23, பிரம்படி லேன்,
கொக்குவில்.
(28491)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

192/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


## காதில் போடுவாரா?

எவராலும் அடக்கிக் கட்டுப்படுத்த முடியாத ஓர் இயக்கமாக விடுதலைப் புலிகள் தினமும் வளர்ந்து வருகின்றனர் ஆகையால் தெற்கின் தற்போதைய தலைவர்கள் இராணுவ ரீதியற்ற முறையிலும் சிந்திக்க வேண்டியது அவசியம். விடுதலைப் புலிகளை ஒடுக்கும் எண்ணத்தைக் கைவிட்டு அவர்களுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

இவ்வாறாக அரசுக்கு ஆலோசனை கூறும் வகையில் கொழும்பு 'சண்டே ஐலண்ட்' வார இதழில் கட்டுரை ஒன்று வெளியாகி இருக்கிறது.

பேச்சுவார்த்தை நடத்தி தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்று காணப்படாவிட்டால் நாடு மெல்ல மெல்லச் சாகும் என்றும் அந்தக் கட்டுரையின் ஆசிரியர் அரசாங்கத்தை எச்சரித்திருக்கிறார். அதாவது நாடு பிளவுபட்டுவிடும் என்பதனை மறைமுகமாகச் சொல்லியிருக்கிறார்.

கட்டுரையாளர் வடக்கு — கிழக்கில் இராணுவத்தின் நிலைமையை ஓரளவில் தெரிந்து கொண்டவராகவும், யாதார்த்தத்தை விளங்கிக் கொண்டவராகவும் இருக்கிறார்.

தமிழர் பிரச்சினை திர்க்கப்பட முடியாத விவகாரமாக உருவெடுப்பதற்கு தென் இலங்கைப் பத்திரிகைகளும் பிரதான பங்கு வகித்தன; இப்போதும் தீவிரமாகப் பங்காற்றிவருகின்றன. சிங்களப் பேரினவாதச் சிந்தனையை ஆதரிப்பதிலும், வளர்ப்பதிலும், பேரினவாதத் தலைவர்களுக்குப் பக்கத்துணையாக நின்று சிங்களப் பொது மக்களைத் தவறாக வழி நடத்தியதிலும், இப்போது வழி நடத்துவதிலும் கொழும்புப் பத்திரிகைகள் முக்கிய பங்காற்றி வந்தன; வருகின்றன. தமது வாசகர்களான சிங்கள மக்களுக்கு தவறான, பொய்யான தகவல்களைத் தெரிவித்து தமிழர்களின் கோரிக்கைகளில் உள்ள நியாயத்தை மறைத்து, அவர்களுக்கு விரோதமான உணர்வுகளை ஊட்டி, உணர்ச்சி வசப்படுத்தி தம்மைச் சார்ந்த அரசியல் வாதிகளுக்கு வாக்குத் தேடிக் கொடுத்தன.

அந்த நிலையுடன் ஒப்பிடும் போது, மேலே குறிப்பிட்டது போன்ற கருத்துக்களை, கட்டுரைகளையாவது வெளியிடும் அளவுக்குக் கொழும்பு பத்திரிகைகளில் சிறு மாற்றத்தைக் காண முடிகிறது.

பிரேமதாசா கொலையாவதற்கு முன்னர் — இப்போதிருந்து சரியாக ஒரு வருடத்திற்கு முன்னர் — 1992 டிசம்பரில் — ஜனாதிபதியின் அரசியல் ஆலோசகர்களில் ஒருவராக இருந்த தயான் ஜெயதிலக்கா ''அனுருத்த திலகசிறி'' என்ற புனைபெயரில் அரசாங்கப் பத்திரிகையான ''சண்டே ஒப்சேவரில்'' எழுதிய கட்டுரை ஒன்றில்—

அரசியல் தீர்வு காண்பதற்கு முன்னர், விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிக்க முயன்றால் யுத்தத்துக்கு ஒருபோதும் முடிவு வராது என்று எச்சரிக்கும் வகையில் ஆலோசனை கூறியிருந்தார். அதனோடு சேர்த்து ஐ. நா தலையிடும் ஆபத்து உண்டென்றும் கூறியிருந்தார். அதே போல தமிழர் பிரச்சினைக்கு சமஷ்டி அமைப்பை ஒரு தீர்வாக்கலாம் என்றும் அவர் ஆலோசனை கூறியிருந்தார்.

அது மட்டுமன்றி வேறு கொழும்புப் பத்திரிகைகளும் அதே காலத்தில் எழுதிய கட்டுரைகளில் விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக வெல்லும் சாத்தியம் அருகிவிட்டதாக எடுத்துக் கூறியிருந்தன.

இவை அரசியல் தலைவர்களின் காதுகளில் விழவில்லை. தெரிவுக்குழுக்கூட இணைப்பை ரத்துச்செய்ய வேண்டுமெனக் கூறித் தோல்வி கண்டது. பிரேமதாசாவுக்குப் பின் வந்த விஜேதுங்கா அந்த ஆலோசனைகளுக்கு நேர்மாறாக நடந்து, இராணுவத் தீர்வு என்று சன்னதம் ஆடி, இப்போது தோல்விக்கு மேல் தோல்வியைத் தழுவி திக்குமுக்காடுகிறார். எவ்வாறெனினும் ''சண்டே ஐலண்''டின் ஆலோசனையை அவர் காதில் போட்டுக் கொள்வாரா என்பது சந்தேகமே. கெடு குடி சொற் கேளாது!

---

யாழ் ப. நோ. கூ. சங்கங்களுக்கு

# மதிய உணவு முத்திரை நிதி வருட முற்பகுதியிலேயே

யாழ்ப்பாணம், டிச. 19
யாழ். மாவட்ட ப.நோ.கூ. சங்கங்களுக்கு மதிய உணவு முத்திரை விநியோகத்திற்கான நிதியை அடுத்த வருட முற்பகுதியிலேயே வழங்க முடியும்.

— இப்படிக் கூறினார் யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர்.

மாணவர் உணவு முத்திரை விநியோகம் தொடர்பாக தமக்குச் சேர வேண்டிய நிதியை தருமாறு கோரி யாழ். ப.நோ.கூ. சங்கங்கள் யாழ். செயலக சமூகசேவைப் பகுதி முன்பு கூமறியல் நடத்தியமை குறித்தே அரச அதிபர் மேற்கண்டவாறு கூறினார்.

இது விடயமாக தாம் கொழும்பில் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டதாகவும் —

திறைசேரியில் நிதி இல்லாத காரணத்தால், மதிய உணவுக்கான நிதியை அடுத்த வருட ஆரம்பத்திலேயே வழங்கமுடியும் எனத் தமக்குத் தெரிவிக்கப்பட்டதாகவும் — அரச அதிபர் கூறினார். (ஒ-3)

மாகாண சபைகள்

## வெளிநாட்டு நிறுவனத்திடம் உதவி பெறவும் கட்டுப்பாடு!

கொழும்பு, டிச. 19
வெளிநாட்டு உதவி நிறுவனங்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு வெளிநாட்டு உதவிகளை மாகாண சபைகள் உட்பட மத்திய அமைச்சுகள் அரச திணைக்களங்கள் மற்றும் அரசகூட்டுத்தாபனங்கள் பெற்றுக் கொள்வது தடை செய்யப்பட்டுள்ளது.

நிதி அமைச்சின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினால் அமைக்கப்பட்டுள்ள மத்திய ஒருங்கிணைப்பு அதிகாரசபை ஊடாக வெளிநாட்டு உதவி கோரும் அனைத்து விண்ணப்பங்களும் அனுப்பப்படவேண்டும் என்று அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இவ்விண்ணப்பங்கள் முதலில் தேசிய திட்டமிடல் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

மத்திய அரசினால் அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி உத்திகள் மற்றும் தேசிய முன்னுரிமை ஆகியவற்றுக்கு உட்பட்டதாக இவ்விண்ணப்பங்கள் இருக்கின்றனவா என்பதை தேசிய திட்டமிடல் திணைக்களம் உறுதி செய்ய வேண்டும்.

ஜனாதிபதியின் செயலகம் இது தொடர்பாக வெளியிட்ட அறிக்கை ஒன்றில்.

'வெளிநாட்டு உதவி வழங்கும் நிறுவனங்களுடன் மத்திய அமைச்சர்கள், ராஜாங்க அமைச்சர்கள் மற்றும் மாகாண முதலமைச்சர்கள் தனித்தனியாக நேரடியாகத் தொடர்புகொண்டு வெளிநாட்டு உதவிகளை பெறுவது பற்றி பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். இது விரும்பத்தகாத, ஒழுங்கற்ற நடவடிக்கையாகும் என்று ஜனாதிபதி கருதுகின்றார். தேசிய நலனைக் கருத்திற்கொண்டு சகல வெளிநாட்டு உதவிகளையும் பொருத்தமான துறைகளுக்கு ஒருமுகப்படுத்தி வழங்க வேண்டும் என்றும் ஜனாதிபதி கருதுகின்றார்' — என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (த-எ)

## வாந்தி பேதியின் தாக்கம் அதிகரிக்கும் வாய்ப்பு!

யாழ்ப்பாணம், டிச. 19
தற்போதைய மழை காலம் காரணமாக யாழ். குடா நாட்டில் வாந்திபேதி நோயின் தாக்கம் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்நோயின் தாக்கத்தால் யாழ் குடாநாட்டில் இதுவரை 26 பேர் மரணமடைந்துள்ளனர்.

மேலும் 870 பேர் இதுவரை பாதிக்கப்பட்டுள்ளனர்.

செப்டம்பர் மாதத்தில் 82 பேரும், ஒக்டோபர் மாதத்தில் 370 பேரும், நவம்பர் மாதத்தில் 278 பேரும், டிசம்பரில் இதுவரை 160 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாக புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

யாழ்ப்பாணத்திலேயே பாதிக்கப்பட்டவர்கள் அதிகம். 338 பேர் இங்கு பாதிக்கப்பட்டுள்ளனர்.

மானிப்பாயில் 205 பேரும், கோப்பாயில் 119 பேரும் சாவகச்சேரியில் 113 பேரும், உடுவில் - தெல்லிப்பழையில் 97 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மானிப்பாய் பகுதியில் வாந்திபேதி தீவிரமாகப் பரவுவதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

## மலையகத் தமிழருக்கு சிவப்பு அடையாள அட்டை

### கண்டிக்கிறார் தொண்டமான்

இலங்கையில் உள்ள இந்திய வம்சாவளி மக்களுக்கு சிவப்பு நிற அடையாள அட்டையை வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இதனை அமைச்சர் தொண்டமான் வன்மையாகக் கண்டித்திருக்கிறார்.

கொழும்பு நாளேடு ஒன்றிற்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் தனது கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

இத்தகைய சிறப்பு அடையாள அட்டைகளை வழங்க சட்டத்தில் வழி செய்யப்படவில்லை. சட்டப்படி தேசிய அடையாள அட்டைகளையே அரசு வழங்க வேண்டும் என்று திரு தொண்டமான் தெரிவித்தார். [த-ச]

## மழையினால் மரக்கறி பயிர்கள் பெருமளவு அழிவு

### சந்தைகளில் உச்ச விலையில்

அச்சுவேலி, டிச. 19
சமீபத்தில் தொடர்ந்து பெய்த மழை காரணமாக குடாநாட்டில் மரக்கறி விலைகள் உயர்ந்துள்ளன.

அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர் பகுதிகளில் தோட்ட நிலங்களில் செய்கைபண்ணப்பட்ட வெங்காயம், மரவள்ளி, பீற்றூட், கரட் போன்ற கிழங்குப் பயிர்களும் கத்தரி, போஞ்சி, பூசணி, புடோல், பாகற்காய் போன்ற பயிர்களும் அழுகி சேதமடைந்துள்ளன.

பெரும் பணச்செலவில் செய்கைபண்ணப்பட்ட பயிர்கள் அறுவடை செய்யும் காலத்தில் அழுகிச் சேதமடைந்திருப்பதால் விவசாயிகளுக்கு பெரும்நட்டம் ஏற்பட்டுள்ளது. (இ-11)

## அரசியல் தீர்வு காண்பதை வாயளவில் நாடுகின்றனர்

### அமைச்சர் தயாரத்ன சொல்கிறார்

யுத்தத்தை நிறுத்தினால் செலவுகளைக் குறைக்கலாம். யுத்தத்தை நிறுத்த ஒரேவழி அரசியல் தீர்வுகாண்பதே. ஆனால் அரசியல் தீர்வை நாடுவோர் அதனை வாயளவிலேயே நாடுகின்றனர். மனமார விரும்புவதில்லை.

புனரமைப்பு புனர்நிர்மாண சமூகநல அமைச்சர் பி. தயாரத்ன இவ்வாறு தெரிவித்தார்.

நாம் வடக்குக்கு உணவு மற்றும் பொருள்களை அனுப்புவதை சிலர் எதிர்க்கின்றனர். நாம் வடக்குக்கு துப்பாக்கி அனுப்புவதாகவும் கூறுகின்றனர். துப்பாக்கி அனுப்புவது எமது வேலையல்ல. வடக்கில் உள்ளவர்களும் எமது மக்களே அவர்களுக்கே நாம் உணவு அனுப்புகிறோம். வடக்கில் உள்ள மக்களை நாம் வென்றெடுக்க வேண்டும். என்றும் அவர் சொன்னார். (த)

## ரூ. 2 1/2 லட் கோடி கடன்!

இந்தியாவின் வெளிநாட்டுக் கடன்கள் மட்டும் இரண்டரை லட்சம் கோடி ரூபாவைத் தாண்டிவிட்டதாக பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (த-எ)

## ''வெட்டு முகம்'' வெளியீட்டு விழா

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் எழுதிய ''வெட்டுமுகம்'' சிறுகதைத் தொகுதியின் வெளியீட்டுவிழா நாளை திங்கள் பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

கலை, பண்பாட்டுக் கழகத் தலைவர் திரு புதுவை இரத்தினதுரை தலைமையில் நடைபெறும் நிகழ்ச்சியில் வரவேற்புரையை த. குறிஞ்சிக்குமரனும், வெளியீட்டுரையை இ. முருகையனும், மதிப்பீட்டுரையை க. தணிகாசலம், செம்பியன்செல்வன், கலாநிதி, சோ கிருஷ்ணராசா ஆகியோரும் நிகழ்த்துவர்.

## மாயமாக மறைந்த ராஜதந்திரப்பை!

லண்டனில் இருந்து இலங்கைத் தூதர் ஜெனரல் சிறில் ரணதுங்க விமானமூலம் கடந்த 6ஆம் திகதி அனுப்பிவைத்த முக்கிய இரகசியத் தஸ்தாவேஜுகள் அடங்கிய இராஜதந்திரப்பை (Dip'omatic Bag)காணாமற்போய்விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

லண்டனில் உள்ள இலங்கை தூதரகத்தில் பணிபுரியும் ராஜதந்திரி ஒருவர் பற்றிய இரகசியத்தகவல்கள் அப்பையில் அனுப்பப்பட்டதாகக் கூறப்படுகிறது. (ஒ-எ)

## பனடோல் கையிருப்பில்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையில் பனடோல் வில்லைகள் தாராளமாக இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

தனியார் வர்த்தகர்களும் பனடோல் வில்லைகளை இங்கு கொள்முதல் செய்து பொது மக்களுக்கு விற்பனை செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-17)

## பயிற்சி வகுப்புகள்

ஜனசக்தி கருத்திட்டத்தின் கீழ் நெல்லியடி கிராம சேவகர் பிரிவில் தட்டச்சு, சுருக்கெழுத்து பயிற்சி வகுப்புக்கள் விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளன

தமிழ், ஆங்கில தட்டச்சு, சுருக்கெழுத்து பயிற்சி வகுப்புக்களில் பயிற்சி பெற விரும்புவோர் நெல்லியடி கிராம சேவை அலுவலருக்கு விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (த-173)

## இன்று

சரஸ்வதி அறவழி மழலைகள் கல்விப் பூங்காவின் வருடாந்த விழா இன்று ஞாயிறு நண்பகல் 12 மணிக்கு கைதடி மேற்கு சரஸ்வதி கலையரங்கில் திருமதி புஸ்பராஜா மாலா தலைமையில் நடைபெறும். (த)

★ ★ ★

பண்டத்தரிப்புக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான ஆங்கில தினப் போட்டி (1993) களுக்கான பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெறும். (த)

★ ★ ★

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இரசிகமணி கனகசெந்திநாதன் நினைவு இலக்கியச் சந்திப்பு இடம்பெறும்.

கலாகேசரி ஆ. தம்பித்துரை தலைமையில் குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் ஆதரவில் நடைபெறவுள்ள இந் நிகழ்ச்சியில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ சண்முகதாஸ் தொடக்கவுரை நிகழ்த்துவார். (த-111)

## ஜனவரி நடுப்பகுதியிலேயே தபால் பொதிகள் வரும்

### அரச அதிபர் தகவல்

யாழ். மாவட்டத்துக்கான தபால்கள் பெரும்பாலும் அடுத்த மாதம் 15 ஆம் திகதியளவில்தான் இங்கு வரும் என தாம் எதிர்பார்ப்பதாக யாழ்- அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

தற்சமயம் கொழும்பில் ஆயிரக்கணக்கான தபால் பொதிகள் தேங்கிக் கிடப்பதாகவும்—

அவற்றை இங்கு எடுத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டதாயினும் கப்பல் வசதியில்லாததால் அவை எடுத்து வரப்படவில்லை. என்றும்— அவர் தெரிவித்தார்.

தற்சமயம் டருத்தித்துறையில் தரித்துள்ள வாதுவ கப்பல் கொழும்பு திரும்பிய பின்னர். அதில் பொருள்கள் ஏற்றப்பட்டு அத்துடன் தபால் பொதிகளும் எடுத்து வரப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (த-3)

## ஆசிரியர் வெற்றிடங்கள் குறித்து உயர் மட்ட மாநாடு

யாழ்ப்பாண மாவட்டம் உட்பட கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பான உயர்மட்ட மாநாடு ஒன்று அடுத்தமாதம் 20 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கிறது.

இந்த நான்கு மாவட்டங்களிலும் பாடசாலைகளில் ஆசிரியர்கள் வெற்றிடங்கள் எதுவும் இல்லை என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளதாகவும் —

ஆனால் அந்த மாவட்டங்களின் அரச அதிபர்கள் அங்கு ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ளதாக தெரிவித்துள்ளதாகவும் —

இதுவிடயம் குறித்து ஆராயவே திட்டமிடல் அமைச்சு செயலாளர் திரு பாஸ்காலிங்கம் தலைமையில் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாவும் தெரிவிக்கப்பட்டது. (த-3)

இலங்கை வங்கியில் கடமைபுரியும்

## தற்காலிக ஊழியர்கள் கடமையில் தொடரலாம்

யாழ்ப்பாணம், டிச 19
இலங்கை வங்கியில் தற்காலிகமாக கடமையாற்றும் ஊழியர்கள் வேலையில் இருந்து நிறுத்தப்பட மாட்டார்கள்.

மேற்கண்ட தகவலை யாழ். அரச அதிபர் தெரிவித்தார்.

கொழும்பில் நடந்த தேசிய புனரமைப்பு இணைப்புக் குழுக் கூட்டத்தில் இவ் விடயம் குறித்து தாம் தெரிவித்ததாகவும்—

தற்காலிக கடமையில் உள்ள ஊழியர்களை தொடர்ந்தும் சேவையில் இருக்க பணிப்பதாக உறுதி தெரிவிக்கப்பட்டதாகவும்— அரச அதிபர் தெரிவித்தார். (த-3)

## லயனல்- அரச அதிபர் கொழும்பில் பேச்சு

யாழ்ப்பாணம், டிச. 19
வடக்கு - கிழக்கு மாகாண சபையின் புதிய ஆளுநராகப் பதவியேற்றுள்ள திரு. லயனல் பெர்னாண்டோவுடன் யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் கொழும்பில் பேச்சுக்கள் நடத்தினார்.

கொழும்பில் தங்கியிருந்த சமயம் இரு தடவைகள் அவருடன் பேச்சு நடத்தியதாகவும், யாழ். மாவட்ட தற்போதைய நிலைமை உட்பட பலதரப்பட்ட விடயங்கள் குறித்து அவருடன் பேசியதாகவும் அரச அதிபர் தெரிவித்தார். (த-3)


## வேம்படி மகளிர் கல்லூரி

## ஆண்டு 6 அனுமதி 1994

1993 ஆம் ஆண்டின் ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் மாணவர்களுக்கு எமது கல்லூரியில் ஆண்டு 6 இல் அனுமதி வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை எமது கல்லூரி அலுவலகத்தில் 23 - 12 - 1993 இற்கு முன் ஒப்படைக்கவும். புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறு அதிபரினால் உறுதிப் படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

- அதிபர்.

வேம்படி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

[சி-6734]



## THE ROTARY CLUB OF JAFFNA

## ENGLISH ESSAY CONTEST

Rotary District 3220 Sri Lanka is Organizing a National Level English Essay Contest 1993.

- ★ **Theme:** Preventing Teen Drug Abuse: Challenges and Solutions
- ★ **Medium:** English
- ★ **Words:** 450 — 600 Words (Typed or Clearly Printed)
- ★ **Age Limit:** 12 — 16 years
- ★ **Closing date:** 28th December 1993.
- ★ Essays will be evaluated based on knowledge of the Subject, Logical development and clarity of ideas presented.

Selection will be done by a Committee appointed by the Rotary District Governor.

The best ten essays will be awarded prizes at the Rotary District Conference 1994.

Attach the following entry form with the Passport Size Photograph and the Essay and send it to:-

**ROTARY ESSAY CONTEST-1993**
**C/O UTHAYAN,**
NAVALAR ROAD, JAFFNA.

### ENTRY FORM—

Name of the Author:
School:
Class:
Age:

I Certify the above Particulars are Correct.

Principal
School Seal.

Date: ..............

(C-6727)



## JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY
VADDUKODDAI

## VACANCIES

Applications are invited from suitable qualified candidates for the following post.

**1. ASSISTANT LECTURER** (ENGLISH)

QUALIFICATION;
B. A. Degree with English as one of the main subjects OR Degree in the English medium.

**2. INSTRUCTOR GRADE III** (ELECTRICAL & ELECTRONICS)

QUALIFICATION:
Passed JCIT OR Possess Craft Certificate of JCIT equivalent institution with merit pass. OR skilled craftsmen with five (05) years experience in the relevant field. And ability to teach in the English medium

**3. STENO TYPIST**

G. C. E. (O/L) or G. C. E. (A/L) with Pitman final examination in Stenography and Credit pass in English at G. C. E. (O/L) with five (05) years experience in stenography. Candidate may be tested for speed.

Shorthand — 90 w. p. m
Typewriting — 45 w. p. m

SALARY: Negotiable, depending on qualification & experience.

★ Apply with full Bio - Data to the

DIRECTOR
JAFFNA COLLEGE,
INSTITUTE OF TECHNOLOGY,
VADDUKODDAI.

On or before: 30th December 1993

[C-6725]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணை சாந்தையர் மடம்

## ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் விநாயக சஷ்டி உற்சவமும் கஜமுக சூரன் போரும்

காலம்: 19–12–1993 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: முற்பகல் 9-30 மணிமுதல்

சங்க அபிஷேகம் - கணபதி ஓமம்
பஞ்சமுகர்ச்சனை

பிற்பகல் 3-00 மணிக்கு
பஞ்சமுக விநாயகர் எழுந்தருளி வீதி வலம் வருதல்

விசேட மங்கள வாத்தியங்கள்:

| நாதஸ்வர இசை மணிகள் | தவில் வித்துவான்கள் |
|---|---|
| S. S. சிதம்பரநாதன் | K. நித்தியானந்தம் |
| M. P. நாகேந்திரம் | T. உதயசங்கர் |
| V. K. கானமூர்த்தி | P. கணேசன் |
| V. K. பஞ்சமூர்த்தி | M. ஜெயானந்தம் |
| R. கேதீஸ்வரன் | K. வீராச்சாமி |

— திருவிழா உபயகாரர்.

(சி-6737)

## 31 ஆம் நாள் கண்ணீரஞ்சலி



| உதயம் | அஸ்தமனம் |
|---|---|
| 12 — 01 — 1940 | 05 — 11 — 1993 |

### திருமதி சோதியம்மா துரைசிங்கம்

வாச சோதி அணைந்ததம்மா பாரிலே – நாம்
பாதை தெரியாமல் தவிக்கின்றோம்
ஆனொரு திசைமாறி நிற்கின்றோம் – இன்று
ஆறுதல் சொல்வதற்கு நீயின்றி யாருமில்லை.

அன்னாரின் 31ஆம் நாளான இன்று ஞாயிற்றுக்கிழமை உடுப்பிட்டியில் உள்ள அவரது மோகன் இல்லத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நடைபெறுகின்றது. இதில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.

சகோதர, சகோதரி குடும்பத்தினர்,
திரு. சி. சுந்தரலிங்கம் பாரததேவி,
(ஆசிரியர், பத்திரிகையாளர்)
திருமதி அதிசயவனிதா ஜெயசேகரம்.
(கனடா)
திரு. சி. மனோதாஸ் றஞ்சினி
(சவிஸ்).

ஈழத்தின்,
நாகேஸ்வரத்தை,
வல்லிச்சியம்மன் கோவிலடி,
வல்வெட்டித்துறை. (28262)

## 25 ஆம் வருட மரண ஞாபக நன்றிப்பலி



| அன்னை மடியில் | இறைவன் அடியில்: |
|---|---|
| 26 — 11 — 1892 | 20 — 12 — 1968 |

அமரர்

### ச. மரியாம்பிள்ளை மனுவேற்பிள்ளை

(சில்லாலை)

அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் அவர் மூலம் இறைவன் அவர் வாரிசுகளுக்கு அளித்த அருட்கொடைகளுக்கு நன்றியாகவும் இம்மாதம் 20ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6 15 மணிக்கு யாழ். கோட்டை செபஸ்தியார் பேராலயத்திலும், காலை 6 - 15 மணிக்கு யாழ். புனித யுவானியார் ஆலயத்திலும், காலை 6-30 மணிக்கு சண்டிலிப்பாய் புனித செபஸ்தியார் ஆலயத்திலும், நண்பகல் 12 மணிக்கு கொழும்புத்துறை புனித பிலிப்புநேரியார் ஆலயத்திலும், 21-12-93 மாலை 4 30 மணிக்கு மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்திலும், 4-30 மணிக்கு பாலையூர் புனித அந்தோனியார் ஆலயத்திலும் பூசைப் பலிகள் நிறைவேற்றப்படும். இவ்வேளையில் கலந்து கொண்டு இறைவனை வேண்டிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மக்கள், மருமக்கள் பேரப்பிள்ளைகள்.
பூட்டப்பிள்ளைகள்.

நல்லாயன் வீதி,
சில்லாலை. (28502)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 361 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 19-12-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## செப்ரிசீமியா மரணம்

யாழ்ப்பாணம், டிச. 19
செப்ரிசீமியா நோயின் தாக்கத்திற்கு இலக்கான இருவர் முன்தினமும் இன்றும் யாழ். ஆஸ்பத்திரியில் மரணமடைந்தனர்.

வசாவிளானில் இருந்து இடம்பெயர்ந்து சாவகச்சேரி வடக்கில் வசிக்கும் ஆர். சிவராஜி (வயது 34) என்ற குடும்பப் பெண்ணும், கைதடி மேற்கைச் சேர்ந்த சின்னட்டி நிசாந்தி (வயது 3) என்ற குழந்தையுமே இறந்தவர்களாவர். (த-15)

## ஒன்றிணைப்பு

யாழ்ப்பாணம், டிச. 19
அஞ்சல் திணைக்களத்தில் தபால் அதிபர், எழுதுவினைஞர் ஆகிய இரு பதவிகளுமே ஒருங்கிணைந்த அஞ்சல் சேவை உத்தியோகத்தர் என்ற தரத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

அரசினால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள அதிகாரப் பரவலாக்கலின் கீழ் இச்சேவைகள் இரண்டும் கடந்த வருடம் மே மாதம் முதல் ஒன்றிணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-162)

## திருவெம்பாவை நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம் டிச. 19
குடாநாட்டில் உள்ள இந்து ஆலயங்களில் திருவெம்பாவை பூசை நாளை திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறும்.

இதே வேளை — பிள்ளையார் பெருங்கதை முடிவுநாள் இன்றாகும். விநாயகர் ஆலயங்களில் இதனையொட்டிய பூசை வழிபாடுகள் நடைபெறும். சுவாமி தெரு வீதி உலாவும் இடம்பெறும். (இ-5-30)

## மட்டக்களப்பு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ரித்து வருவதாலும்—குளத்தின் அணைக்கட்டு பல மற்று இருப்பதாலும் அங்கிருந்து நீரை வெளியேற்றும் நடவடிக்கையை துரித கெதியில் மேற்கொள்ளவேண்டியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

திருநகர், பாரதிபுரம், இலிநொச்சி ஆகிய குளங்களும் உடைப்பெடுக்கும் நிலையில் உள்ளன. முரசுமோட்டை வரியான், பாரதிபுரம் ஆகிய இடங்களில் இருந்து மக்கள் வெள்ளத்தால் வெளியேறியுள்ளனர். வீடுகள் பல அடியோடு முற்றாக நாசமாகியுள்ளன. (இ-5)

## பொத்த...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ளனர்.

இராணுவம் சந்தித்த பல பின்னடைவுகளும், அது பெற்ற குறைந்த வசதிகளும் இராணுவத்தினரிடையே இருந்த ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் தாழ்த்தி விட்டன. ஆயிரக் கணக்கானோர் இராணுவத்தை விட்டு ஓடிவிட்டனர். தென்னிலங்கை இளைஞர்கள் முன்பு போல் இராணுவத்தில் சேர வந்து குவிந்த நிலையில்லை.

யுத்த முனையில் தாம் கைப்பற்றிய ஏராளமான ஆயுதங்களின் துணையோடு தமிழ் போராளிகள் இராணுவ முகாம்களை வேட்டையாடியுள்ளனர்.

மொத்தத்தில் செயல் நோக்கில் தீவிரமான போராளிகளுடன் நடத்தும் யுத்தத்தில் சரிந்த கொண்டிருக்கும் இராணுவத்தை எடுத்துப் பிடித்து நிமிர்த்திவிடுவதற்கு புதிய தளபதி ஜெரி டி சில்வா தமது முழு அனுபவ ஆற்றலையும் பயன்படுத்த வேண்டி வரும்.

மொத்தத்தில் புதிய தளபதிக்கு யுத்த களத்திலும் சரி, அதற்கு வெளியேயும் சரி ஏகப்பட்ட வேலைகள் காத்துக் கிடக்கின்றன.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## எக்கலம்

கல்வி நிறுவனம்
(மனோகராச்சந்தி)
K. K. S வீதி.
யாழ்ப்பாணம்.

பிரத்தியேக
தமிழ்
வகுப்புக்கள்

**A/L 94, 95**

ஆசிரியர் —
★ திரு. காரை -
எஸ். சென்கா

ஆரம்பம்: 20–12–93
பி. ப. 3–30 மணி

★ வாரத்தில் 3 மணித்தியாலயம் வகுப்புக்கள் நடைபெறும்
(28503)

## குடாநாட்டில் பெரும்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
யாலை, எழிலூர், கொட்டடி, நாவாந்துறை, குருநகர், கொய்யாத்தோட்டம் பகுதிகளிலும் பலரின் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததால் வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியதாலும் அப்பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்தனர்.

பொம்மைவெளி, வயல்க் குடியிருப்புப்பகுதி, காக்கைதீவு ஆகிய பகுதிகளில் குடியிருந்தோரும் வீடுகள் பாதிக்கப்பட்டதால் இடம்பெயர்ந்துள்ளனர்.

யாழ். ஆஸ்பத்திரியின் மகப்பேற்று விடுதி, தாதியர் விடுதி, ஆகியவற்றுக்குள் வெள்ளம் புகுந்ததால் நோயாளரும், தாதியரும் பாதிக்கப்பட்டனர். இப்பகுதியில் மூன்றடி வெள்ளம் பாய்ந்தது. விக்ரோறியா வீதியிலும் அவ்வாறே வெள்ளம் பெருகியது.

நகரின் பல பகுதிகள் நேற்றுக் காலை வெள்ளக் காடாகக் காட்சி தந்தன. வீட்டு வளவுகள், வீதிகள் எங்கும் வெள்ளம் பெருக்கெடுத்துப் பாய்ந்து கொண்டிருந்ததை காண முடிந்தது.

நகரின் பிரதான வீதிகள் பலவற்றில் நேற்றுக் காலை போக்குவரத்துச் செய்ய முடியாத அளவுக்கு மழை வெள்ளம் மேவிப் பாய்ந்தது.

நகரில் உள்ள குளங்கள் அனைத்தும் நிரம்பி வெள்ளம் மேவிப் பாய்கிறது குளங்களை அண்டியிருந்த மக்கள் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்தது.

நகரில் வீதியோரம் உள்ள வடிகால்கள் பல வெள்ளத்தில் மூழ்கிவிட்டன அதனால் வெள்ளம் பாய்வதற்கு வசதி இன்றி ஆங்காங்கே தேங்கி நின்றது.

கடந்த 10 ஆண்டுகளில் பெய்த பலத்த மழை இதுவெனக் கருதப்படுகிறது. பலத்த மழை வெள்ளத்தை அடுத்து நேற்று இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. நேற்றுக் காலை நகரில் வர்த்தக நிலையங்கள் பெரும்பாலும் மூடியிருந்தன.

### அகதிமுகாம்கள்

தீவுப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள அகதிமுகாம்கள் பல வெள்ளத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. அரியாலை மணியரசன், நெடுங்குளம் சாம்சன், நாவலடி டயஸ், பூம்புகார் நக்கீரன் முகாம்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

வெள்ளம் குடிசைகளின் உள்ளே புகுந்து கொண்டதால் இங்குள்ள சுமார் 600க்கும் அதிகமான அகதிகள் பாதிப்புக்கு இலக்காகினர்.

இக்குடியிருப்புத் திட்டங்களில் பல குடிசைகள் வெள்ளம் காரணமாக வீழ்ந்துள்ளன.

நேற்றைய தினம் கடும் மழையின் மத்தியிலும் பாடசாலைகளில் ஆண்டிறுதிப் பரீட்சைகள் நடைபெற்றன. மாணவர்கள் மழை ஒழுக்கிலிருந்தும் பரீட்சையை எழுத நேர்ந்தது. சில பாடசாலைகளில் 'பெற்றோமாக்ஸ்' வெளிச்சத்தில் பரீட்சை நடைபெற்றது.

கொக்குவில், நந்தாவில், கோண்டாவில், திருநெல்வேலி, கல்வியங்காடு, கட்டப்பிராய், இருபாலை, நாயன்மார்கட்டுப் பகுதிகளிலும் வெள்ளப் பெருக்கால் பல தாழ்ந்த பகுதிகள் பாதிக்கப்பட்டன இப்பகுதிகளில் வயல்கள் வெள்ளத்தில் மூழ்கிக் கிடக்கின்றன.

வட்டுக்கோட்டை, சங்கரத்தை, அராலி, நவாலிப் பகுதிகளிலும் பல இடங்களில் மக்கள் வெள்ளப் பெருக்கால் வீடுகளை விட்டு வெளியேற நேர்ந்தது.

### வழுக்கையாறு பாய்கிறது

வழுக்கியாறு கொள்ளவு மீறிப் பாய்கிறது. பல இடங்களில் வீதிகள் வெட்டப்பட்டு வெள்ளம் கடலுக்குள் செலுத்தப்படுவதை காண முடிந்தது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள பல அகதி முகாம்களும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன. முகாம் குடிசைகளுக்குள் வெள்ளம் புகுந்ததால், அங்கு வாழ்ந்தோர் பாடசாலைகள், கோவில்களில் தஞ்சம் புகுந்தனர். ஆனைக்கோட்டை, மானிப்பாய் பகுதிகளிலும் தாழ்ந்த பகுதிகளில் வாழும் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறினர்.

சாவகச்சேரி, மட்டுவில், மீசாலை, அல்லாரை, கைதடிப் பகுதிகளில் தாழ்நிலப் பிரதேசங்களில் வெள்ளப் பெருக்கேற்பட்டுள்ளது. மற்றும் தென்மராட்சிப் பகுதியில் உள்ள குளங்கள், கேணிகள் நிரம்பி வழிந்து தண்ணீர் மேவிப் பாய்கிறது. வயல் நிலங்களும் வெள்ளக் காடாக உள்ளது. (அ)

## கிழக்குக் கரையில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
தொலைவில் நிலைகொண்டிருந்தது.

அது மேலும் தீவிரமாகி நாட்டின் கிழக்கு கரையோரத் திசையில் வடமேற்குப் பக்கமாக நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று கிழக்கு கரையோரத்திற்கு மிக சமீபமாக இந்த தாழ்வு அமுக்கம் நகரக்கூடும்.

கிழக்கு-தென்கிழக்கு கரையோரத்துக்கு அப்பாலுள்ள கடல் பகுதியில் இடை இடையே மழை பெய்யும் என்றும்—

கடும் காற்று வீசும் என்றும்—

கடல் கொந்தளிப்பாக இருக்கும் என்றும்—

இந்த கடல் பிரதேசங்களுக்கு மீன் பிடிக்கச் செல்வதைத் தவிர்த்துக்கொள்ளும் படியும் அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ 9)

## பிற்போடப்பட்டுள்ளது

"நீர்வேலி மத்தி காளி அம்பாள் ஆலயத்தில் இன்று (19 – 12 – 1993) நடைபெறவிருந்த அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது

● திகதி பின்னர் அறிவிக்கப்படும்."

- நிர்வாகம்

[28503]

## மரண அறிவித்தல்

### இராமலிங்கம் சின்னத்தம்பி

(வெலிசடைச் சின்னத்தம்பி)

சித்தன்கேணியைச் சேர்ந்த இ. சின்னத்தம்பி (முன்னாள் இந்திரா ஸ்ரோர்ஸ் உரிமையாளர், வெலிசடை) அவர்கள் 18-12-1993 சனிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் இரத்தினம்மாவின் அன்புக் கணவரும், இந்திரா ஆனந்தகுமாரசாமி (உரிமையாளர், இந்திரா ஸ்ரோர்ஸ், மாங்குளம்), இரியாசக்தி, காலஞ்சென்ற அருந்தவநாதன், கமலாதேவி, தில்லைநாயகி, தேவராணி, சிவசுப்பிரமணியம், சண்முகநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், நித்தியானந்தன், இராமநாதன், பிறைசேர் அழகனார், சக்திதாசன், வசந்தாதேவி, விபுலாதேவி, அருந்ததி ஆகியோரின் அன்பு மாமனாரும், மோகனா, ரமேஷ், வாசுகி, அரவிந்தன், மஞ்சுளா, அஜித், அருள், சித்திரகலா, சிவசர்மிளா, இலைச்சலா, சிவஷிலா, சுகன்யா ஆகியோரின் பேரனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (19-12-93) நண்பகல் 12–00 மணியளவில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
ஆனந்தகுமாரசாமி
(மகன்)

சித்தன்கேணி. (28508)

## நெஞ்சம் மறவாத அன்னை



### திருமதி சோமகலாவல்லி சண்முகலிங்கம்

| உதிர்வு: | திதி: |
|---|---|
| 02 - 11 - 1993 | 19 - 12 - 1993 |

தன்னலமேபெரிதாகக் கருதிடாத் தகைபவராய்
சக்கபடி நோயறிந்து செய்வைத் தியத்தால்
இன்னுயிரைக் காத்தவரு சண்முக லிங்கத்தின்
இல்லத்து ராணியென இன்முகமாய்-
வாழ்ந்தவளே
மண்ணுலகில் சாயிதனில் மாபக்தை யாகி
மகிழ்ந்தவளே சோமகலா வல்லியெனும்-
நல்லாளே
நன்நிலைமை எய்திடவே-
நாதனடி சேர்ந்துவிட்ட
நாயகியே நன்னுமுனக் கென்றும் சாந்தி!!

மானுடத்தை நேசித்த மண்புகா லன்னை பரோ
மாபதியாம் செஞ்சிலுவைச் சங்கத்தின்-
போஷகரே
ஊனமுற் றவர் வாழ்வை புனரமைக்கும்
ஒப்பரிய சங்கத்துக் குப்போ டுழைத்தவரே
ஆனமட்டும் புற்றுநோய் பரவ திருக்க
அமைத்த சங்கத் திலமைந்து பணி புரிந்தவரே
வானகத்திற் சேவைசெய்ய விரைந்தே ஈசன்
வார்கழுவி ணைந்திரோ வளரும் சாந்தி!

அன்னையின் பணியை நினைவு கூருவோம்

பகவான் மருந்தகம்,
பணியாளர், உறவினர்கள்.

221, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (சி-6736)

## மரண அறிவித்தல்கள்

### சிவானந்தன் சிறீகாந்தன்

கொழும்புத்துறை மேற்கை வசிப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற சிவானந்தன் – சிவபாக்கியம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன் சிறீகாந்தன் காலமாகிவிட்டார்.

அன்னார் தேவசாந்தினியின் அன்புக் கணவரும், வடிவாம்பிகை, சிவகாமசுந்தரி, மகேஸ்வரி, யோகேஸ்வரி, சிவகுமார் (உதவித் தபாலதிபர், வவுனியா,) ஆனந்தகுமார் (கனடா), சூரியகுமார், தேவகுமார் (உள்ளகக் கணக்காய்வாளர், சாவகச்சேரி ப.நோ.கூ. சங்கம்), சர்வலோகேஸ்வரி (ஆசிரியை, வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், குணரத்தினம் (இளைப்பாறிய அதிபர்), ராஜேந்திரன் (டசன்), சுந்தலிங்கம், செல்வகுமாரன், சக்திதேவி (ஆசிரியை, இந்து மகளிர் கல்லூரி), அம்பிகை (கனடா), மைதிலி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக இன்று (19-12-93) பிற்பகல் 3 00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து கொழும்புத்துறை துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்..

தகவல்
சி.சிவகுமார்
(சகோதரன்)

82, கொழும்புத்துறை வீதி.
கொழும்புத்துறை.
யாழ்ப்பாணம். (28507)

### அம்பலவாணர் செல்வரத்தினம்

(ஓய்வுபெற்ற தபால் தொலைத் தொடர்பு அத்தியட்சகர்)

உரும்பராயைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட அ. செல்வரத்தினம் நேற்று (18-12-93) காலமாகிவிட்டார்.

இவர் முன்னாள் கொக்குவில் கிழக்கு விதானை கந்தையா - செல்லம்மாவின் மகள் யோகம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அம்பலவாணர், அன்னப்பிள்ளையின் மகனும், புகையிரதநிலைய அதிபர் காலஞ்சென்ற நவரத்தினம், தபாலதிபர் காலஞ்சென்ற குணரத்தினம், காலஞ்சென்றவர்களான செல்லமுத்து, சிவக்கொழுந்து, பாக்கியம், இரத்தினம், கண்மணி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான குமாரையா, சிவரத்தினம், தேவராசா, கணேசன், அமுதரத்தினம் என்போரினதும் சோமசுந்தரம், மார்க்கண்டு ஆகியோரினதும் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19-12-93) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
யோகம்மா.
(மனைவி)
க. சோமசுந்தரம்.
(மைத்துனர்)

புகையிரத நிலைய வீதி.
கொக்குவில். (28509)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org